வாக்குமூலம்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
சி.சி.எண்.138/18
வழக்கு சாட்சி – அ.சா.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிச்சைமணி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | காளிமுத்து | தொழில் | பால் வியாபாரம் |
| கிராமம் | தப்புக்குண்டு | சமயம் | |
| தாலுக்கா | தேனி | வயது | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.02.24

**( எதிரி ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 5, 6 வருடம் இருக்கும் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. தப்புகுண்டில் பாண்டியராஜன் தோட்டத்தில் வேலை பார்த்தேன். பாண்டியராஜன் அவர் தோட்டத்திலிருந்த மோட்டாரை காணவில்லை என்று புகார் கொடுத்திருந்தார். போலிசார் வந்து விசாரித்து பால்பண்ணை அருகில் ஒரு பையனை பிடித்து விசாரித்தார்கள் அவன் பெயர் எனக்கு தெரியாது. அவனை விசாரித்தார்கள். அதில் நானும், சாமி என்பவரும் கையெழுத்து செய்தோம். மேற்படி சாமி என்பவர் இறந்துவிட்டார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து அசாஆ 2. அத்தாட்சியில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து அசாஆ 3. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ சமயத்தில் நான் பாண்டியராஜன் தோட்டத்தில் வேலை பார்த்தேன். மோட்டார் காணாமல் போன விபரம் முன்பே தெரியும் என்றால் சரியல்ல. மோட்டார் காணாமல் போன விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனது ஓனர் புகார் கொடுத்த பின்பு தான் தெரியும். பாண்டியன் தோட்டத்தில் தான் வேலை பாரக்கிறேன் என்றால் சரிதான். தோட்டமும், பண்ணையும் ஒன்றாக தான் உள்ளது என்றால்ச ரிதான். தோட்டத்தில் நான் தண்ணீர் பாய்ச்சுவேன் என்றால் சரியல்ல. புல் அறுத்து மாடுகளை

பார்த்துக்கொள்வேன். சேகர் என்பவர் தண்ணீர் பாய்ச்சுவார். எப்போது தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் நான் புல் மட்டும் தான் அறுத்துவருவேன். எனதுஒனர் மோட்டார் காணாமல் போனதாக எந்த தேதியல் சொன்னார் என்றால் தேதி எனக்கு தெரியாது. மோட்டார் காணாமல் போனதை நான் பார்க்கவில்லை என்றாலும் அந்த விபரம் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். மோட்டார் காணாமல் போன பின்பு அந்த இடத்தை நான் சென்று பார்த்தேன். நான் கிணற்றை போய் பார்த்துவிட்டு திரும்பும் போது போலிசார் வந்தார்களா , போலிசார் கிணற்றை பார்த்துவிட்டு வரும் போது நான் சென்றேனா என்றால் நான் கிணற்றை பார்த்துவிட்டு திரும்பும் போது போலிசார் வந்தார்கள். போலிசாரை நான் பண்ணை பக்கத்தில் வைத்து பார்த்தேன். போலிசாரை எந்த இடத்தில் வைத்து பார்த்தேன். மோட்டாருக்கும் பண்ணைக்கும் இடையில் பார்த்தேன். பண்ணைக்கும் மெயின் ரோட்டிற்கும் இடையில் 2 கி,மீ துாரம் இருக்கும். மெயின் ரோடு ஸ்ரீரெங்காபுரம் டீ தப்புகுண்டு செல்லும் ரோடு என்றால் சரிதான். என்னுடன் கையெழுத்து செய்த நபர் பெயர் சாமி என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் தோட்டத்திற்கு நடந்து போய்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் ஆஜர் எதிரியை பார்க்கவில்லை என்றால் சரிதான். போலிசார் அவரிடம் என்ன விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த சமயத்தில் போலிசார் எழுதினார்களா என்றால் எழுதவில்லை. சாட்சி கையெப்பம் மட்டும் பெற்றார்கள். அதில் என்ன எழுதியிருந்து என்று தெரியுமா என்றால்நான் படிக்கவில்லை. போலிசாரும் என்னிடம் படித்து காண்பிக்கவில்லை. அங்கு போலிசார் வேறு எதுவும் செய்யவில்லை. அங்கிருந்து போலிசார் வேறு எங்கு சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் பொருட்களை கைப்பற்றினார்களா என்றால் கம்மாய்க்குள்பொருள் இருப்பதாக சொன்னார்கள். நான் அங்கு செல்லவில்லை என்றால் சரிதான். சம்பவதன்று நான் இல்லை என்றாலும், எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் பாண்டியராஜன் எனக்கு முதலாளி என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக போலிசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்யும் போது நான் இல்லை என்றாலும் என் முன்னிலையில் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனவே எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.